செ.வெ.எண்:71 நாள்:06.02.2018

# தமிழ்நாடு வனத்துறை சார்பில் பறவைகள் கணக்கெடுப்பு

தமிழ்நாடு முழுவதும் ஆண்டு தோறும் ஒரே நாளில் பறவைகள் கணக்கெடுப்பு பணி நடைபெற்று வருகிறது. இந்த வருடம் திருநெல்வேலி மாவட்டத்தில் 7.2.2018 மற்றும் 8.2.2018 அன்று பறவைகள் கணக்கெடுப்புப்பணிகள் கூந்தன்குளம், காடன்குளம், சிலையம், திருமலாபுரம், துத்திகுளம்,கோடன்குளம், டானார்குளம்,விஜயநாராயணம், பிரான்சேரி மற்றும் திருப்புடைமருதூர் பறவைகள் பாதுகாப்பகம் ஆகிய குளங்களில் பறவைகள் கணக்கெடுப்பு நடைபெற உள்ளது. இக்கணக்கெடுப்பில் கல்லூரி மாணவர்கள் மற்றும் தன்னார்வத்தொண்டர்கள் பங்கேற்க உள்ளனர். குளத்திற்கு 5 நபர்கள் வீதம் 50 பேர் இக்கணக்கெடுப்பில் பங்கேற்கின்றனர். கடந்த வருடம் மழை பெய்யாத காரணத்தினால் கூந்தன்குளத்திற்கு பறவைகள் வரவில்லை. இந்த வருடம் நல்ல மழை பெய்துள்ளதால் பறவைகள் எண்ணிக்கை அதிக அளவு இருப்பதற்கு வாய்ப்புள்ளதாக மாவட்ட வன அலுவலர், திரு.த.சம்பத், இ.வ.ப., தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி